**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.265/2022**
**Prosecution Witness – PW.6**

| | |
|---|---|
| Name | : திருமதி. சிவசங்கரி |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.07.2026.

(Accused Present).

முதல் விசாரணை–

நான் தற்பொழுது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் கன்னியாகுமரி மாவட்டத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றுகிறேன்கடந்த 25.09.2015 ஆம் தேதி இரணியல் காவல் நிலையத்தில் உதவியாளராக பணியில் இருந்த போது 14.00 மணிக்கு ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரியில் இருந்து போன் மூலம் கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று ஆசாரிப்பள்ளம் மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சுங்கான் கடை, பரசேரி ஊரை சேர்ந்த சுப்பையா பிள்ளை மகன் சைலஜன் என்பவர் கொடுத்த புகார் மனுவைப் பெற்று, இரணியல் காவல் நிலையம் வந்து இரணியல் காவல் நிலைய குற்ற எண் 710/2015 ஆக பிரிவுகள் 147, 294 (B), 307, 324 மற்றும் 506 (ii) IPC ன் கீழ் இரண்டு இ.தா.சா படி 18.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரை இரணியில் நீதித்துறை நடுவருக்கு அனுப்பி வைத்தேன் மேலும் வழக்குகோப்புகளை குளச்சல் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அப்பொழுது பொறுப்பில் இருந்த இரணியல் ஆய்வாளர் காவல் நிலைய ஆய்வாளருக்கு விசாரணைக்காக அனுப்பி வைத்தேன். அது தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்என்னிடம் காண்பிக்கப்படும் முதல் தகவல் அறிக்கை நான் தான் பதிவு செய்தேன் என்றால், ஆமாம். அது **அ.சா.ஆ.3** குறியீடு செய்யப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்த அன்று ஆசாரி பள்ளம் மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால், 14.00 மணிக்கு தகவல் பெற்று 15.00 மணிக்கு சென்று விட்டேன். நான் போகும் பொழுது புகார்தாரர் எழுத்து மூலமாக புகாரை தயார் செய்து வைத்திருந்தார் என்றால், ஆமாம். அதை யார் தயார் செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால், ஆமாம். அதில் உள்ள கையெழுத்து அவருடையதா என்று எனக்கு தெரியாது என்றால், அவருடைய கையெழுத்து தான். அதை எப்படி உறுதிப்படுத்தினேன் என்றால், அவர் சொன்னார். இந்த வழக்கை நான் எப்படி பதிவு செய்தேனோ அதேபோல் தான் குற்ற எண்.711/2015 நான் பதிவு செய்தேன் என்றால், ஆமாம். இந்த எதிரி தான் அந்த வழக்கில் புகார்தாரர் என்றால், ஆமாம். அதே நாள் அதே மருத்துவமனையில் தான் இந்த எதிரியிடமும் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால். எதிரி எத்தனை மணிக்கு வாக்குமூலம் கொடுத்தார் என்றால், வழக்கு கோப்பை பார்த்து தான் சொல்ல முடியும். எதிரி இந்த வழக்கின் 1வது சாட்சி அவரை 10.30 மணிக்கு தாக்கியதாக வாக்குமூலம் கொடுத்து இருக்கிறார் என்றால், சரியில்ல சுமார் 11.00 மணி என்று சொல்லி இருக்கிறார். நான் இந்த வழக்கின் 1வது சாட்சியின் வாக்குமூலத்தை பதிவு செய்ய செல்லும் பொழுது எதிரியும் உள்நோயாளியாக தான் சிகிச்சையில் இருந்தார் என்றால் உள்நோயாளியாக தான் இருந்தார். ஆனால் வாக்குமூலம் கொடுக்கவில்லை. புகார் தான் கொடுத்தார். எதிரி தான் முதலில் புகார் கொடுத்தார் என்றாலும், இந்த வழக்கின் முதலாவது சாட்சி கொடுத்து அழுத்தத்தின் காரணமாக எதிரி கொடுத்த புகாரை முன்பதிவு செய்யாமல் இந்த வழக்கின் முதலாவது கொடுத்த முதல் சாட்சியின் புகாரை பதிவு

**செய்தேன் என்றால், இல்லை. நான் முதல் சாட்சிக்கு சாதகமாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.**

**மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**